தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம்

TAMIL NADU FOREST UNIFORMED SERVICES RECRUITMENT COMMITTEE

8வது கீழ் தளம், எண்.01 ஜீனிஸ் சாலை, பனகல் மாளிகை,
சைதாப்பேட்டை, சென்னை–600 015.

8th Down Floor, No.01, Jeenis Road, Panagal Maaligai,
Saidapet, Chennai - 600 015.

Phone No. / தொலைபேசி எண். 044-2434 1251

Website : www.forests.tn.gov.in Email ID : tnfusrc.tnchn@nic.in

## வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புதல்

(விளம்பர எண். 2/2019, நாள்: 30.11.2019)

****

## வனக்காப்பாளர்/ ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவிகளுக்கு சான்றிதழ் சரிபார்த்தல் / உடற்தகுதி சரிபார்த்தல் கலந்து கொள்வதற்கு விண்ணப்பதாரருக்கான அறிவுரைகள்

**கோவிட் – 2019 பின்பற்ற வேண்டிய வழி முறைகள்:**

விண்ணப்பதாரர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு தற்போதைய கோவிட்– 19 பரவும் சூழ்நிலையில் இந்திய அரசின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் சமூக விலகல் விதிமுறைகளை சான்றிதழ் சரிபார்ப்பின் போது நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சோதனை மேற்கொள்பவர் மற்றும் சோதனைக்கு உட்படுத்தப்படுபவர் ஆகியோர் பாதுகாப்பில் எவ்விதமான சமரசத்திற்கும் இடமின்றி சான்றிதழ் சரிபார்ப்பினை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்கு குழுமத்தால் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களது சொந்த நலனினை கருத்தில் கொண்டு சமூக விலகல் மற்றும் சுகாதாரத்திற்கான வழிகாட்டுதல்களை கடைபிடிக்க வேண்டும். சமூக விலகல் வழிகாட்டுதல்கள் மற்றும் பின்வரும் வழிமுறைகளை பின்பற்றாத விண்ணப்பதாரர்களின் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வழிவகுக்கும். விண்ணப்பதாரர்கள் கீழ்காணும் வழிமுறைகளை கவனித்து பின்பற்ற வேண்டும்.

1. கோவிட் – 19 தொற்றுநோய் பரவும் நிலையினைக் கருதி, கடைசி நிமிடத்தில் ஏற்படும் கூட்ட நெரிசலை தவிர்ப்பதற்கு ஏதுவாக நுழைவு வாயில் மூடும் நேரத்திற்கு முன்பாகவே சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெறும் இடத்திற்கு வருகைபுரிதல் வேண்டும்.

2. சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெறும் இடத்தினை அடையும்போது சமூக விலகலுக்கான நடைமுறைகளை பின்பற்றவும், இரு நபர்களுக்கிடையே 6 அடி இடைவெளியினை கடைபிடித்தலும் வேண்டும்.
3. சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெறும் இடத்தின் நுழைவு வாயில் மற்றும் வளாகத்தில் தொடர்பில்லாத முறையில் கைகளை தூய்மைபடுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, அனைத்து விண்ணப்பதாரர்களும் தங்களது கைகளை சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.
4. கோவிட் – 19 தொற்றுள்ளதாக (Positive) சோதனை முடிவு கொண்டுள்ள அல்லது காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெறும் வளாகத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். நுழைவு வாயிலில் உடல் வெப்பநிலையினை பரிசோதிக்கும் சாதனம் கொண்டு பரிசோதனை செய்கையில் உடல் வெப்பம் ( > 99.14 F / 37.3 °C) அதிகமுள்ள விண்ணப்பதாரர்கள் வளாகத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். கோவிட் – 19 தொற்றினை கண்டறிவதற்கு (Pulse Oxymeter) வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
5. விண்ணப்பதாரர்கள் தாங்கள் விரும்பினால் கையுறை அணிந்து கொள்ளலாம்.
6. தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் வழங்கப்படும் முகத்திரையினை (Surgical Mask) விண்ணப்பதாரர்கள் அணிய வேண்டும்.
7. விண்ணப்பதாரர்கள் மட்டுமே வளாகத்தினுள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். எந்தவொரு சூழ்நிலையிலும் உடன் வரும் நபர்கள் வளாகத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.
8. **அரசு மருத்துவமனையில் பெறப்பட்ட கோவிட் – 19 தொற்று இல்லை என்பதற்குரிய பரிசோதனை முடிவு சான்றுடன் விண்ணப்பதாரர்கள் வருகை புரிதல் வேண்டும். சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெறும் தேதிக்கு மூன்று நாட்களுக்கு முன் கோவிட் – 19 பரிசோதனை மேற்கொண்டிருத்தல் வேண்டும்.**

**பொது**

விண்ணப்பதார்கள் கீழ்காணும் அறிவுரைகளை மிகவும் கவனத்துடன் படிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றப்பட்ட கடவுச்சீட்டு அளவுள்ள (Passport size) இரண்டு புகைப்படங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

2. மேற்காண் சரிபார்ப்பு மற்றும் தேர்விற்கு மீண்டும் வாய்ப்போ அல்லது தேதி மாற்றமோ வழங்கப்படமாட்டது.

3. இப்பணிக்காக பயணப்படி / அகவிலைப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

**<u>அ. சான்றிதழ் சரிபார்த்தல்</u>**

1) விண்ணப்பதாரர்கள், **சான்றிதழ் சரிபார்ப்பிற்கு** குறிப்பாணையின் நகல் மற்றும் இணையவழி விண்ணப்பத்தின் நகல் ஆகியவற்றுடன் குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் தவறாமல் கலந்துகொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2) சான்றிதழ் சரிபார்த்தலின்போது கீழ்குறிப்பிட்டுள்ள **<u>அசல் சான்றிதழ்கள்</u>** உடன், அவற்றின் **சுய சான்றொப்பமிட்ட (Self Attested) கூடிய ஒரு தொகுதி** (One Set) ஆகியவற்றை அவர்களது விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளவாறு கொண்டு வருதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்த்தலுக்கு தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3) விண்ணப்பதாரர்கள், சான்றிதழ்களைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வரிசைப்படி சமர்ப்பிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

   i. பிறந்த தேதிக்கான சான்று (SSLC சான்றிதழ் / அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிப்பு)

   ii. தகவல் சிற்றேட்டின் பத்தி 11 **(d)** ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி தகுதிவாய்ந்த அலுவலரிடமிருந்து பெற்ற சாதி சான்றிதழ்.

   iii. விண்ணப்பத்தில் திருநங்கை (மூன்றாம் பாலினத்தவர்) என்று குறிப்பிட்டிருக்கும் பட்சத்தில் அதற்கான சுய உறுதிமொழி மற்றும் தகவல் சிற்றேட்டின் **இணைப்பு–II** ன்படி தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்திடமிருந்து பெறப்பட்ட அடையாள அட்டை ஆகியவை.

   iv. அறிவிக்கை நாள். 30.11.2019 இனம்–8 ல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதிக்கான சான்று.

   v. விண்ணப்பதாரர், போதுமான தமிழறிவு கொண்டுள்ளதற்கான SSLC/ HSC/ Degree சான்றிதழ் அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழ்.

   vi. தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்துள்ளவர்கள் தொடர்புடைய விளையாட்டு சான்றிதழ் மற்றும் தகவல் சிற்றேடு இணைப்பு– **III** ன்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில் அங்கீகாரம் பெற்ற அலுவலரால் அளிககப்பட்ட சான்றிதழ் ஆகிய இரண்டையும் அளிக்க வேண்டும் (தகவல் சிற்றேடு பத்தி 6.5 னை காண்க).

   **குறிப்பு:– சான்றிதழ் சரிபார்ப்பின் போது விளையாட்டு சான்றிதழ் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட படிவங்களிலுள்ள சான்றிதழ் ஆகியவற்றின் அசல்களை அளிக்காத நபர்களை தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் பரிசீலனை செய்யப்படமாட்டாது.**

   vii. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் தமிழ்வழியில் பயின்றோருக்கான (PSTM) இட ஒதுக்கீடு கோரியிருக்கும்பட்சத்தில் தகவல் சிற்றேட்டின் **இணைப்பு–IV** ன்படி தகுதிவாய்ந்த

அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் (உரிய கல்வித்தகுதியை தமிழ்வழியில் பயின்று இருக்க வேண்டும்).

viii. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் ஆதரவற்ற விதவைக்கான இட ஒதுக்கீடு கோரியிருக்கும்பட்சத்தில் வருவாய் கோட்டாட்சியர் / துணை ஆட்சியர் / உதவி ஆட்சியரிடமிருந்து பெறப்பட்ட ஆதரவற்ற விதவைச் சான்றிதழ்.

ix. முன்னாள் இராணுவத்தினருக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்துள்ளவர்கள் தகவல் சிற்றேடு **இணைப்பு–V** –ல்குறிப்பிட்டுள்ளவாறு உரிய சான்றிதழ்களை அளிக்க வேண்டும்.

x. விண்ணப்பதாரர் ஒழுக்கம் மற்றும் நன்னடத்தைச் சான்றிதழைக் கடைசியாகப் பயின்ற அல்லது தற்பொழுது பயிலும் கல்வி நிறுவனத் தலைவரிடமிருந்து பெறப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தொலைதூர வழியில் கல்வி பயின்றிருந்தாலும் இது பொருந்தும். தொலைதூர வழியில் கல்வி பயின்ற விண்ணப்பதாரர்கள் கடைசியாக நேரடியாகப் பயின்ற கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ஒழுக்கம் மற்றும் நன்னடத்தைச் சான்றிதழ்.

xi. விண்ணப்பதாரர் அரசுப் பணியாளராக இருக்கும்பட்சத்தில் தகவல் சிற்றேட்டின் **இணைப்பு–VI**-ன்படி பெறப்பட்ட தடையின்மை சான்றிதழ்.

xii. **ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர்** பணியிடத்திற்கு மேற்கூறியவற்றுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள சான்றிதழ்களையும் சான்றிதழ் சரிபார்ப்பின்பொழுது சமர்ப்பிக்க வேண்டும்.

அ) தகுதி வாய்ந்த போக்குவரத்து அலுவலரிடமிருந்து பெறப்பட்ட ஓட்டுநர் உரிமம்.

ஆ) ஓட்டுநர் உரிமம் பெற்ற பிறகு வாகனம் ஓட்டியதற்கான முன் அனுபவமாக மூன்று வருட காலத்திற்கு குறையாமல் புகழ்பெற்ற நிறுவனத்தில் இலகுரக மோட்டார் வாகனம் / கனரக மோட்டார் வாகனம் ஓட்டியதற்கான சான்றிதழ்.

இ) மோட்டார் வாகனங்களின் இயந்திர நுட்பம் குறித்து அடிப்படை அறிவு கொண்டதற்கான சுய உறுதிமொழி.

ஈ) தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட முதலுதவி சான்றிதழ்.

உ) மாவட்ட தலைமை மருத்துவமனையில் கீழே கொடுக்கப்பட்டவையுடன் பெறப்பட்ட சான்றிதழ்.

i. கண்ணாடி அணியாமல் பார்வைத் திறன் கீழே கொடுக்கப்பட்டுள்ள அளவுகளில்:–

| | **இடது கண்** | **வலது கண்** |
|---|---|---|
| தூரப்பார்வை | 6/6 | 6/6 |
| கிட்டப்பார்வை | 0.5 | 0.5 (ஸ்நெல்லன்) |

ii. இரண்டு கண்களும் போதுமான பார்வைத் திறனைக் கொண்டிருப்பது.

iii. நிறக்குருடு இல்லாமை, மாறுகண் அல்லது கண்களின் ஆரோக்கியமற்ற நிலை அல்லது ஒரு கண் தெரியாமல் இருப்பது.

iv. விண்ணப்பதாரரின், ஏதேனும் ஒரு கண்ணில் லேசிக் / லேசர் அறுவை சிகிச்சை / எக்ஸைமர் அறுவை சிகிச்சை செய்யாமல் இருப்பது.

4) விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்த்தலுக்கு தற்காலிகமாக அனுமதிக்கப்படுவதின் மூலம் **உடற்தகுதி சரிபார்த்தல் மற்றும் உடற்திறன் (நடைத்தேர்வு) தேர்விற்கு கலந்து கொள்வதற்கு / பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு எந்த உரிமையும் கோரக்கூடாது.**

**5) விண்ணப்பதாரரின் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களே எந்நிலையிலும் இறுதியானதாகும். விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களில் தவறு ஏதேனும் கண்டறியும்பட்சத்தில் விண்ணப்பம் எந்நிலையிலும் நிராகரிக்கப்படும். கல்வித்தகுதி / வயது / சாதி / இதர இட ஒதுக்கீடுகள் குறித்து பின்னர் பெறப்படும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

6) விண்ணப்பதாரரின் கவனம் தகவல் சிற்றேட்டில் பத்தி 13ல் ஈர்க்கப்படுவதுடன், விண்ணப்பதாரர் சான்றிதழ் சரிபார்ப்புக் கூடத்தில் ஏதேனும் ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடும் பட்சத்தில் அது தீவிரமாகப் பார்க்கப்படும்.

குறிப்பு:– சான்றிதழ் சரிபார்க்கும் மையத்திலிருந்து விடுபடுவதற்கு முன்பு, விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்த்தலுக்காக வழங்கப்பட்ட அனைத்து அசல் சான்றிதழ்களும் சரிபார்க்கப்பட்ட பின்பு பெற்றுக்கொண்டதை உறுதி செய்துகொள்ள வேண்டும். அசல் சான்றிதழ் தொலைந்துபோன பிறகு தேர்வுக் குழுமம் எந்த பொறுப்பும் ஏற்காது.

**ஆ. உடற்தகுதி சரிபார்த்தல்:**

1. சான்றிதழ் சரிபார்த்தலுக்குப் பிறகு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர் உடற்தகுதி சரிபார்த்தல் தேர்விற்கு தற்காலிகமாக அனுமதிக்கப்படுவார். விண்ணப்பதாரர்களுக்கு மேற்கூறிய தேர்வில் கலந்து கொண்டதற்கான சான்றிதழ் வழங்கப்படும்.
2. விண்ணப்பதாரர் உடற்தகுதி சரிபார்த்தல் தேர்விற்கு தற்காலிகமாக அனுமதிக்கப்படுவதின் மூலம் **பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு எந்தவித உரிமையும் கோர இயலாது.**
3. விண்ணப்பதாரரின் அடையாளம் கண்டு கொண்ட பிறகு அறிவிக்கையின் பத்தி 10 ல் குறிப்பிட்டுள்ளபடி உடற்தகுதி சரிபார்த்தல் நடத்தப்படும்.
4. **சான்றிதழ் சரிபார்ப்பிற்குப்பின் உடற்தகுதி சரிபார்த்தல் அதே வளாகத்தில் மேற்கொள்ளப்படும்.**
5. விண்ணப்பதாரர் உடற்தகுதி சரிபார்த்தலின் போது அறிவிக்கையின் பத்தி 10 (ii) – ல் குறிப்பிட்டுள்ள சான்றிதழை (உடற்தகுதிச் சான்றிதழ்) சமர்ப்பிக்க வேண்டும்.

குறிப்பு:—

1. விண்ணப்பதாரர் சான்றிதழ் சரிபார்த்தல் / உடற்தகுதி சரிபார்த்தல் ஆகியவற்றிற்கு அனுமதிக்கப்படுவது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள இத்தேர்விற்கான வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டு முற்றிலும் தற்காலிகமானதாகும்.
2. விண்ணப்பதாரின் கவனம் தகவல் சிற்றேட்டில் பத்தி 13ல் ஈர்க்கப்படுவதுடன், விண்ணப்பதாரர் சான்றிதழ் சரிபார்த்தல் / உடற்தகுதி தேர்வுக்கூடத்தில் ஏதேனும் ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடும் பட்சத்தில் அது தீவிரமாகக் கண்காணிக்கப்படும். மேலும், ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால் தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் எதிர்காலத்தில் நடத்தப்படும் தேர்வுகளில் கலந்து கொள்ள தகுதி நீக்கம் செய்யப்படுவதுடன், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம் போன்ற அரசுத் துறையினரால் நடத்தப்படும் தேர்வுகளிலும் கலந்து கொள்வதற்கும் தகுதி நீக்கம் செய்யப்படுவர்.

**நாள்: 19.11.2020** **உறுப்பினர், த.நா.வ.சீ.ப.தே.கு.**